


செப்டெம்பர் 11 சம்பவத்துக்குப் பிறகு, லஷ்கர் நிகழ்த்தத் தொடங்கிய தனியாவர்த்தனங்களைப் பார்க்கலாம் என்று ஆரம்பித்தோம். எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஷாட்டுகள் கொஞ்சம் பெரிதாகப் போய்விட்டன. இன்னும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளவும். இந்த செங்கோட்டை தாக்குதலையும் சொல்லிவிட்டால், நேரே 2001 அக்டோபருக்கு அந்தப் பக்கம் ஒரு லாங் ஜம்ப் அடித்துவிடலாம்.

2000-வது ஆண்டு டிசம்பர் 22-ம் தேதி ராத்திரி தில்லி செங்கோட்டையில் லஷ்கர் இ தொய்பா நிகழ்த்திய திடீர்த் தாக்குதல் சில பேருக்கு நினைவிருக்கலாம்; பல பேருக்கு மறந்திருக்கலாம். ஆனால், ரொம்ப முக்கியமான சம்பவம் இது. அதுநாள் வரை காஷ்மீர் எல்லைக்குள் கில்லி ஆடிக்கொண்டிருந்தவர்கள், அப்போதுதான் தலைநகரம் வரைக்கும் நகர்ந்து வந்து கிலிக்கொடி ஏற்றிவிட்டுப் போனார்கள்.

செய்தியை இன்னும் மறந்திருக்காதவர்களுக்கு இப்போது நினைவுபடுத்தினாலும் கொஞ்சம் உதறல் எடுக்கும். கட்டாயம்! வெறும் பத்தே நிமிஷம். ரணகளறி பண்ணிவிட்டுப் போய்விட்டார்கள்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை. ஷாஜஹான் ஆசையாகக் கட்டிய கோட்டைக்குள் அரசாங்க ஊழியர்களும் அண்டர்வேர் வியாபாரிகளும் திருட்டுப் பொருள் விற்பனையாளர்களும் தத்தம் பணிகளை முடித்துவிட்டுக் கிளம்ப யோசித்துக்கொண்டிருந்த நேரம். இரவு சரியாக ஒன்பது மணி. செங்கோட்டை மியூசியம் ரொம்ப ஃபேமஸ். எப்போதும் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி அது. சுற்றுலாப் பயணிகளால் மட்டுமல்ல. பழைய தில்லியின் நிஜ முகத்தை செங்கோட்டை வளாகத்தில்தான் பிரமாதமாக தரிசிக்க முடியும். பளபளப்பும் வறுமையும் கைகோத்து உலா வரும் பிராந்தியம். பெரும் பணக்காரர்களையும் பிச்சைக்காரர்களையும் அடுத்தடுத்துப் பார்க்கலாம். சுருக்கமாகச் சொல்வதென்றால், இந்தியாவின் மினியேச்சர் வடிவம் அது.

அதனாலேயே அதன் முக்கியத்துவம் கூடி விடுகிறதல்லவா? வருஷத்துக்கு ஒருமுறை பிரதம மந்திரி கொடியேற்றி வைத்துவிட்டு கண்ணாடிப் பாதுகாப்பு வளையத்துக்குள் இருந்தபடி வீர உரை ஆற்றுவது கிடக்கட்டும். நானூறு வருஷத்துக்கு முற்பட்ட சரித்திரமும் சமகாலப் புழுதியும் கைகோக்கிற பிராந்தியம் என்பதுதான் முக்கியம்.

அதனாலேயே அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தது லஷ்கர். அதுவும் வெள்ளிக்கிழமை. கோட்டை வளாகத்து முஸ்லிம்கள் தொழுகையெல்லாம் முடித்துவிட்டு, ராச்சாப்பாட்டுக்கோ, உறக்கத்துக்கோ தயாராகிக் கொண்டிருந்த சமயம்.

எந்தத் திசையிலிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால், வந்தார்கள். இரண்டு பேர். உள்ளே நுழையும் வரை யார் கண்ணிலும் ஒரு வித்தியாசமும் படவில்லை. செங்கோட்டைக்கு

வருகிற, போகிறவர்கள் அத்தனை பேர் தோள்களிலும் பைகள் இருக்கும். இது சர்வ சாதாரணம். அப்படித்தான் அவர்கள் தோளில் தொங்கியதையும் அவர்கள் நினைத்திருக்க வேண்டும். ஆனால் அது பையல்ல. இயந்திரத் துப்பாக்கி. குருவி சுட வந்தவர்கள் என்று கூட நினைத்திருக்கலாம். கோட்டைக்கு வெளிப்புறம் சோர் பஜார் பகுதியில் அதுவும் அப்போது வழக்கத்தில் உண்டு. ஆனால், ராத்திரி ஒன்பது மணிக்குச் சுடுவதற்கு எந்தக் குருவி காத்திருக்கும் என்று யாருக்கும் தோன்றவில்லை.

உள்ளே நுழைந்தவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். சிக்னல் பரிமாறிக்கொள்ளப்பட்டது. நீ அந்தப் பக்கம், நான் இந்தப் பக்கம். அவ்வளவுதான்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அந்தப் பிராந்தியத்தில் கண்ணில் தென்பட்ட அத்தனை பேரையும் அவர்கள் இருவரும் சுட்டுக்கொண்டே ஓடினார்கள். சுடப்பட்டு விழுந்தவர்கள் கண்ணில் மட்டும்தான் அவர்கள் பட்டிருக்க முடியும். மற்றவர்களுக்கு என்ன நடக்கிறது என்பதே புரியவில்லை. இரவு நேரம். தபதபவென்று யாரோ ஓடுவது தெரியும். முகத்தைப் பார்க்க முடியுமா என்ன? ஆகவே, ஒருத்தருக்கும் அடையாளம் தெரியவில்லை.

செங்கோட்டைக்குள் இருக்கும் ராணுவ சேவை அலுவலகம் ஒன்றின் வாசலில் சுடப்பட்டு விழுந்து கிடந்த அப்துல்லா தாக்குர் என்பவரைத்தான் முதலில் அடையாளம் கண்டார்கள். ஆனால், பிரயோஜனமில்லை. அவரும் இறந்துதான் இருந்தார். ஏதோ விபரீதம் என்பது புரியவே அந்த ஐந்து நிமிடங்கள் தேவைப்பட்டன. அதற்குள் இருவரும் தத்தம் பாதையில் அகப்பட்ட அத்தனை பேரையும் சுட்டுக்கொண்டே ஓடி, கோட்டையின் கிழக்கு வாயில் அருகே வெட்டவெளிக்கு வந்துவிட்டிருந்தார்கள்.

அசம்பாவிதம் புரிந்து, ஏதோ தன்னாலான உபகாரம் என்று நினைத்த நாவிதர் ஒருவர், அங்கே அவர்களை வழிமறித்தார். சிறு கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்தார்களோ என்னமோ. அங்கிருந்து மீண்டும் இருவரும் கோட்டையைச் சுற்றிக்கொண்டு ஓடி, அகழ்வாராய்ச்சித் துறை அலுவலகம் இருந்த வளாகத்தருகே வந்தார்கள்.

குண்டுச் சத்தம் கேட்டு அங்கே அசோக்குமார் நாயக் என்பவர் சாலைக்கு ஓடி வந்து பார்த்தார். அவரது விதி அங்கே எழுதப்பட்டது. குறுக்கே வந்தவரைச் சுட்டுவிட்டுத் தாண்டி ஓடினார்கள் இரண்டு பேரும்.

சைரன் ஒலிக்கத் தொடங்கியிருந்தது இப்போது. ஜீப்புகள் உள்ளே சீறி வந்தன. தாக்க வந்த இரண்டு பேரும் போன பாதையை அனுமானித்து காவலர்கள் ஓட, சாலையில் விழுந்து கிடந்த அசோக்குமார் நாயக்கைத் தூக்கிப் போட்டுக்கொண்டு ஒரு ராணுவ ஜீப், அருகே உள்ள ராணுவ மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றது.

ஆனால் பிரயோஜனமில்லை. யார் சுட்டார்கள், ஆளைப் பார்த்தாயா என்று பிள்ளையார் சுழிக் கேள்விகளைக் கூடக் கேட்கமுடியவில்லை. அவரும் இறந்துவிட்டார்.

அங்கே ஓடிக்கொண்டிருந்த தீவிரர்கள் இரண்டு பேரும் ஆட்டம் போதும் என்று முடிவு செய்தவர்களாக, தப்பித்து வெளியேறும் வழி தேடி இப்போது ஓடத் தொடங்கியிருந்தார்கள். ஆனால், சுடுவதை மட்டும் நிறுத்தவில்லை. மியூசியம் வளாகத்தின் அருகே இருந்த ஆர்மி கமாண்டரிங் ஆபீஸர் வீட்டை நோக்கிச் சுட்டபடியே அவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். கோட்டையின் வெளிச் சுற்றுச் சுவர் அருகே வந்ததும், கிடைத்ததைப் பிடித்துக்கொண்டு குரங்கு போலத் தாவித்தாவி மேலே ஏறினார்கள்.

எல்லாமே கண்ணிமைக்கும் நேரத்துக்குள். இருபதடி உயர மதில் சுவர். அதனாலென்ன? அங்கிருந்து அலேக்காக அப்படியே வெளியே ரிங் ரோடில் குதித்தார்கள். குதித்த சுவடு

தெரியாமல் காற்றில் கரைந்து காணாமல் போய்விட்டார்கள்.

தாக்குதல் ஐந்து நிமிடம். தப்பிக்கும் காண்டம் இன்னொரு ஐந்து நிமிடம். அவ்வளவுதான். களேபரமாகிவிட்டது செங்கோட்டை. இரவின் அமைதி குலைக்கப்பட்டு ஜீப்புகளும் ஆம்புலன்ஸ்களும் மோப்ப நாய்களுமாகப் பிராந்தியம் உறக்கமற்றுப் போனது. அகாலத்தில் பிரதமரை எழுப்பித் தகவல் சொன்னார்கள். உள்துறை அமைச்சருக்குச் செய்தி போய் அவர் அலறிப் புடைத்துக்கொண்டு, பாதுகாப்புத் துறை அமைச்சகத்தைத் தொடர்பு கொண்டார். புலனாய்வு ஏஜென்சிகள் குவிக்கப்பட்டன.

தலைநகரின் பாதுகாப்பு எந்த லட்சணத்தில் உள்ளது?

ஆராய்ச்சிகள் ஆரம்பமாயின. கோட்டைக்குள் எப்படி அன்னியர்கள் நுழைந்து இப்படியொரு படுகொலைச் சம்பவத்தைச் செய்ய முடியும்? காவல் என்ன ஆயிற்று? இதற்கு, சம்பவம் நடந்த நேரத்தில் செங்கோட்டையில் பவர் கட் என்பது காரணமாகச் சொல்லப்பட்டது. அதே பவர் கட்டினால்தான் அவர்கள் தப்பித்து ஓடவும் முடிந்ததாக ஒரு பின்னிணைப்புத் தரப்பட்டது.

மிகுந்த நெருக்கடி நேரம் அது. அப்போதுதான் வாஜ்பாயி தலைமையிலான மத்திய அரசு, காஷ்மீர் இயக்கங்களுடன் ஏதாவது அமைதிப் பேச்சுவார்த்தை சாத்தியமா என்று பார்க்க ஆரம்பித்திருந்தது. ஹுரியத் மாநாட்டுக் கட்சியுடனான பேச்சுவார்த்தை விவரங்கள் தினசரிகளில் வரத்தொடங்கியிருந்தன.

பாகிஸ்தானைச் சற்று நகர்த்திவைத்துவிட்டு, காஷ்மீர் இயக்கங்களுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்வது யாருக்கெல்லாம் மண்டையிடி கொடுக்குமோ, அவர்களுக்கெல்லாம் தவறாமல் கொடுத்திருந்தது. அதன் விபரீத விளைவுதான் செங்கோட்டைச் சம்பவம் என்பதைக் கண்டுபிடிக்க பத்து நிமிஷமே போதுமானதாக இருந்தது, அப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸுக்கு.

செய்தது லஷ்கர் இ தொய்பாதான் என்கிற விவரத்தை மறுநாளே தெரிவித்துவிட்டார்கள். விசாரணைகளும் தேடுதல் வேட்டையும் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் சொன்னார் லால் கிஷன் அத்வானி. உள்துறை ஆச்சே? உறங்க முடியுமா நிம்மதியாக?

எதுடா சாக்கு என்று காத்துக் கொண்டிருந்த கம்யூனிஸ்டு கட்சியின் பொலிட் பீரோவுக்கு சர்க்கரைப் பொங்கலாக அமைந்துவிட்டது சம்பவம். இறந்தவர்களுள் இரண்டு பேர் ராணுவ ஜவான்கள் என்பதுதான் இதில் விசேஷம். பிடித்துக் கிழி கிழியென்று கிழித்துவிட்டார்கள் கம்யூனிஸ்டுகள். உச்சபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் தலைநகரின் இதயப் பகுதியிலேயே நிகழ்த்தப்பட்ட தாக்குதல் அது. என்றால், தேசப் பாதுகாப்பின் லட்சணம் இதுதானா?

நாடாளுமன்றம் ரகளையானது. யாரைப் பேச விடுவது, யார் பேச்சைக் கவனிப்பது என்றே யாருக்கும் புரியவில்லை.

அந்தத் தருணத்தில் பதற்றப்படாமல் பேசிய ஒரே நபர் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் மட்டும்தான். 'பாதுகாப்புக்கு ஒரு குறைவும் இல்லை. இது ஒரு சிறு சம்பவம்தான். ராணுவ உளவுத்துறை முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. தலைநகரப் பாதுகாப்பு இன்னும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. யாரும் கலவரமடைய வேண்டாம். தவிரவும் இந்தச் சம்பவத்தால் அமைதிப் பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்படாது.'

பேச்சுகள், அறிக்கைகள் ஒருபுறம் சூடு பிடித்துக்கொண்டிருக்க, மறுபுறம் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் மேற்படி சம்பவத்துக்கு ஹர்கத் உல் அன்ஸார் என்கிற இயக்கம் காரணமாக இருக்குமோ என்று

முதலில் சந்தேகப்பட்டார். அதுவும் ஒரு காஷ்மீர் இயக்கம். பாகிஸ்தான் ஸ்பான்சர்டு இயக்கம். அவருக்கு ஏன் அந்தச் சந்தேகம் வந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில், அத்தனை தெனாவட்டாகத் தலைநகருக்குள் நுழைந்து பட்டாசு வெடிக்குமளவுக்குத் திறமை வாய்ந்த இயக்கம் அல்ல அது.

ஆனால், நல்லவேளையாக லஷ்கர்தான் என்பது தெரிந்துவிட்டது. அவர்களே பி.பி.சி.க்கு ஒரு கடுதாசி போட்டதன் புண்ணியம். ஆனாலும் புரியாத விஷயம் ஒன்றுதான்.

செங்கோட்டை என்பது மிகவும் பாதுகாக்கப்பட்ட ஓரிடம். அத்தனை சுலபத்தில் இம்மாதிரியான அத்துமீறல்களெல்லாம் சாத்தியமில்லை. இரண்டு வாசல்கள்தான். லாஹூரி கேட். சலீம்கர் கேட். இரண்டு வாசல்களிலும் காவல் துறையல்ல; ராணுவக் காவலே உண்டு. உள்ளே போகிற, வருகிற வாகனங்களை நிறுத்திப் பரிசோதித்துவிட்டு அனுப்புவதுதான் வழக்கம். உள்ளேயே இந்தியப் புலனாய்வுத் துறையின் இரண்டு விசாரணைக் கூடங்கள் இருக்கின்றன, இயங்குகின்றன. தவிரவும், இந்திய ராணுவத்தின் ஒரு பிரிவான ராஜ்புத்னா ரைஃபில்ஸின் தலைமையகமும் அங்கேதான் இருக்கிறது.

இதெல்லாம் இருந்தும் ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை. செங்கோட்டையின் பாதுகாப்பு எப்படிப்பட்டது என்பது, சம்பவம் நடந்த பிறகு உள்ளே தில்லி போலீஸ் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட லட்சணத்தில் புரிந்துவிட்டது.

ஆம். அங்கே ராணுவத்துக்கும் உள்ளூர் போலீஸுக்கும் ஆகாது போலிருக்கிறது. இந்த விவரம் தெரிய வருவதற்கு இப்படியொரு சம்பவம் வேண்டியிருந்தது.

சொல்லப்போனால், செங்கோட்டையில் இப்படியொரு சம்பவம் நடந்திருக்கிறது என்கிற செய்தியே தில்லி போலீஸுக்கு வரவில்லை. செங்கோட்டையிலிருந்து யாரும் தகவல் சொல்லவில்லை. எல்லாம் ராணுவ ஏரியா. எல்லாரும் ராணுவ ஆபீஸர்கள். இறந்த இரண்டு பேரும் ராணுவ ஜவான்கள். எதற்கு தில்லி போலீஸ் என்று நினைத்துவிட்டார்கள் போலிருக்கிறது.

பி.பி.சி.யின் தில்லி தலைமையகத்துக்கு வந்த ஒரு ஃபேக்ஸ் செய்திதான் வெளியுலகத்துக்கு விஷயத்தைச் சொன்னது. செய்தது லஷ்கர். தாமே முன்வந்து பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியா என்று பி.பி.சி.தான், தன் சந்தேகம் தீர்வதற்காக தில்லி போலீஸை அணுகியது. பதிலுக்கு தில்லி கமிஷனரும் அப்படியா என்று கேட்டபோதுதான் ராணுவம் - போலீஸ் க்ளோசப்பின் நேசப்பிணைப்பும் வெளிச்சத்துக்கு வந்தது.